1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) மற்றும் (ஆ) : கல்லேரி—வாணுபுரம் சாலை அமைப்பு வேலை, இதுவரை அரசினரால் எந்த பட்டியலிலும் சேர்க்கப் படவோ அல்லது ஒப்பளிக்கப்படவோ இல்லை. சர்க்கரை இயக்குநர், ரூ. 17 இலட்சம் செலவில் வாணுபுரம் முதல் வெரையூர் வரை சாலை அமைப்பு வேலைக்குப் பிரேரணை அனுப்பினார். புதிய வேலைகளுக்கு நிதி இல்லாமையால் இவ்வேலை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்படி சாலையின் ''வாணுபுரம் முதல் தலையாம்பள்ளம் கி.மீ. 0/0—5/5'' பகுதியை 1977–78-ம் ஆண்டில் மத்திய அரசு உதவிபெறும் இணைப்புச் சாலைத் திட்டத்தின் கீழ் போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. த. வேணுகோபால் : பேரவைத்தலைவர் அவர்களே, இப்படி ஆலை நிதியில் இருந்து, தென்னார்க்காடு மாவட்டத்தில் எவ்வளவு தொகையில் சாலைகள் அமைக்கப்பட்டன ? வடார்க்காடு மாவட்டத்தில் எவ்வளவு தொகையில் சாலைகள் அமைக்கப்பட்டன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களுக்கு எவ்வளவு செலவுகள் என்று இல்லை. ஆனால் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 53 லட்சம் ரூபாய்க்கு 1972-லே இருந்து 1975 வரையில் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதிநிலை அறிக்கையிலாவது வடார்க்காடு மாவட்டத்திற்குச் சாலைகளை அமைக்க மதிப்பீடுகள் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றித் தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* 300. வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு. ஆரூரான் சர்க்கரை ஆலையிலிருந்து இதுவரை வசூலிக்கப்பட்டுள்ள கேன் செஸ் வரியின் மொத்த தொகை எவ்வளவு ?

(ஆ) இந்த நிதியிலிருந்து சாலை பராமரிப்புக்கு வழங்கப் பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைப் பகுதியில் கரும்பு மேல் வரி, இதுவரையில் 1971 ஆம் ஆண்டு முதல் 1976–77 வரை 73·64 லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டது.

(ஆ) திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைப் பகுதியில் கரும்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் போடப்பட்ட பழைய சாலைகள் பராமரிப்பதற்கான செலவு 1973–74 முதல் 1976–77 வரையில் 1·21 லட்சம் ரூபாயாகும்.

திரு. மு. ரா. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் ஆப்பக்கூடல் சக்தி சர்க்கரை ஆலையிலிருந்து அரசுக்கு வரவேண்டிய வரி பாக்கி உண்டா, எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வரிபாக்கி உண்டு. எவ்வளவு என்ற குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

[முற்பகல் 10–00]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, அந்த கரும்பு செஸ் 70 லட்சம் ரூபாய் அளவிற்கு வசூலாகியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் செலவழிக்கப் பட்டுள்ள தொகை 1 லட்சம் என்று இருக்கிறது. ஏன் இவ்வளவு தொகை அதிகமாக சேர்ந்து இருக்கிறபோது, அந்தத் தொகையை அந்தப் பகுதியில் முன்னேற்றம் செய்வதற்காக செலவழிக்கப் படவில்லை என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சர்க்கரை ஆலைப் பகுதியில், கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. வரக்கூடிய வரி முழுவதையும் அந்த சாலை அபிவிருத்தி திட்டங்களுக்கே செலவு செய்யவேண்டும் என்ற விதிமுறை இங்கேயில்லை ஆனால் அந்தப் பகுதிகளில் போடப்பட்டு இருக்கின்ற பழுதுபட்ட சாலைகளைப் பழுதுபார்ப்பது, சீர்கெட்ட சாலைகளைச் சீர்ப்படுத்துவது, செம்மைப்படுத்தவேண்டிய சாலைகளைச் செம்மைப்படுத்துவது போன்றவற்றை செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

1978 பிப்ரவரி 27]

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

திரு. து. புருஷோத்தமன் : பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே தாங்கள் வருவதற்கு முன்பாகவும், வந்ததற்குப் பிறகும், இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் சிலர் வேறு மாநிலத்தில் தங்களுடைய கட்சி வெற்றி பெற்றதைக் குறித்து. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, சென்ற 6–1–1978 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் இல்லாததால் அன்று கொண்டு வரப்பட்ட கேள்விக்கு பதில் சொல்லவில்லை. அதற்கு எப்போது பதில் அளிக்கப்படும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை முதலமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) உரிமைப் பிரச்னைகள்.

(அ) இந்தியன் எக்ஸ்பிரஸ் நடத்தும் சண்டே ஸ்டாண்டர்டு பத்திரிகை பேரவை நடவடிக்கை பற்றி தவருக வெளியிட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவை விதி 184-ன் கீழ் அவை உரிமை மீறல் குறித்து ஒரு பிரச்னையை திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் நடத்தும் '' சன்டே ஸ்டாண்டர்டு '' மீது கொண்டு வர அனுமதி கேட்டு இருக்கிருர்கள். அவருக்கு அனுமதி அளிக்கிறேன். அதை படிக்குமாறு மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 184-ன் அடியிற் கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினையை ஆங்கில நாளிதழ் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' மீது சட்டப் பேரவையில் எழுப்ப தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

'தமிழக அரசிதழ் பதிவு பெருத அலுவலர்களின் பிரச்சனை குறித்து' 1978-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25-ம் நாளன்று எங்கள் கட்சியின் தலைவர் அவர்கள் பேசும்போது, 'நிதியமைச்சர் மனேகரன், முதலமைச்சர் வந்ததும் கைது செய்யப்பட்டவர்கள்